1994 ஏப்ரல் 8]

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லுகின்றார்கள். அப்படி என்றால், ஒரு டீ-க்கு எவ்வளவு? ஒரு காப்பிக்கு எவ்வளவு? அதற்கு எவ்வளவு உயர்த்தப்படும்? ஒரு டீ, காப்பி இன்றைக்கு எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயே ரூ.2.50 ஆகிறது. எனவே, அங்கே எவ்வளவு உயர்த்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு பன், டீ ஆகியவற்றுக்காக 20 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது 30 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல இரவு நேரப்படி நாள் ஒன்றுக்கு ரூ.2.50-ல் இருந்து ரூ.3.50 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் மொத்தமாக ரூ.35.25 செலவாகிறது. அதுமட்டுமல்ல, இதைப்பற்றி நேற்றே நான் அவையில் அறிவித்தேன். அதுமட்டுமல்ல, கிடங்குகளில் இருப்பவர்களுக்கெல்லாம் இந்த உதவி இல்லாமல் இருந்தது. அவர்கள் 229 பேர். அவர்களுக்கும் சேர்த்து இந்த மாதத்திலிருந்து வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நம்முடைய அரசு அச்சகத்தில் பணம் கொடுப்பதை விட்டுவிட்டு, ஒரு கேன்டீனை அமைத்து அந்தத் தொழிலாளர்களுக்கு டீ, பன் போன்றவற்றைக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 223, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

223-

சேலம் பெருமாகவுண்டம்பட்டியில் குடியிருப்புப் பட்டா இலவசமாக வழங்குதல்

20421- திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சேலம் தாலுகா, பெருமாகவுண்டம்பட்டி கிராமத்தில் ச.நெ.20/2, 22/2, 26/2, 28/1 மற்றும் 28/3 மேய்ச்சல் தரைப் புறம்போக்கில் வீடுகட்டிக் குடியிருப்பவர்களுக்கு கிராம நத்தமாக மாற்றி இலவசமாகப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாய் இல்லாத சீவன்களுக்காக உதவுகிற மந்தைப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்குகளை, அவைகளுக்காகப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசினுடைய கடமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டு இருக்கிற இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30, 40 ஆண்டுகளாக வீடுகளைக் கட்டி குடி இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே மின்சார இணைப்புகள் பெற்று, பவர்லூம் கூட போடப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி இப்போது கால்நடைகளே இல்லாத பகுதியாக, தொழில் நிறைந்த பகுதியாக, பவர்லூம் ஃபேக்டரிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட அந்தப் பகுதியில் தற்போது பட்டா கொடுப்பதற்கான பிராசஸ் நடந்து, ஃபைல் இங்கே அரசுக்கு வந்து இருக்கிறது. எனவே, அதைப் பரிசீலித்து விரைவில் பட்டா கொடுப்பதற்கு-தகுதி படைத்தவர்களுக்கு இலவசமாகவும், தகுதியற்ற வசதி படைத்தவர்களுக்கு அதற்குண்டான கட்டணத்தை சலுகை முறையிலே வழங்கி, பட்டா கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து, பல்லாண்டுகளாக அங்கே ஆக்கிரமித்து இருக்கிறார்கள்; அதுவும் வசதிவாய்ப்பு உள்ளவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள்; பவர்லூம் போட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மாடு இல்லை என்றால், மாட்டையே அவர்கள் ஆக்கிரமித்து மாட்டை அகற்றி விட்டார்கள் போல் தெரிகிறது. இருந்தாலும், இப்போது இருக்கிற நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, திரு. வி.பி. சந்திரசேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.